தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2021

ஆண்டு: 6 திகதி: 12/06/2021

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. தேவரதி குலராஜா

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 10 | |
| வினா 7 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

**1.1 பின்வரும் உரைப்பகுதியை கவனமாக வாசித்து கீழேயுள்ள வினாக்களுக்கு பூரண விடை எழுதுக.**

## விடாமுயற்சி

ஒரு செயலில் வெற்றி பெறவேண்டுமாயின் அதற்கு முயற்சி தேவை. எடுத்த முயற்சியை இடையிலே நிறுத்திவிடாது, தொடர்ந்து செய்து முடிப்பதே விடா முயற்சி எனப்படும். 'முயற்சி திருவினையாக்கும்' என்றார் வள்ளுவர். 'எதனையும் நான் திடீரென்று கண்டு பிடிக்கவில்லை. பல்லாண்டுகள் ஊண் உறக்கமின்றி உழைக்க உதவி செய்தது எனது விடாமுயற்சி தான்' என்று தோமஸ் அல்வாஎடிசன் கூறுகிறார். மனவலிமையுடன் நாம் ஒரு காரியத்தைச் செய்ய முனையும்போது அதில் நாம் வெற்றியைக் காணலாம். இதனை உணர்த்தவே ஔவையார் 'ஊக்கமது கைவிடேல்' என்றார்.

றொபேட் புரூஸ் என்பவன் ஸ்கொட்லாந்து தேசத்து அரசன். அவன் ஒரு முறை அயல் நாட்டு மன்னனுடன் போர் செய்ய நேரிட்டது. போரில் அவன் தோற்றுவிட்டான். அவன் விடாமுயற்சி அவனைத் தொடர்ந்து போர் செய்ய உதவியது. அவன் இவ்வாறு ஆறு முறை போர் செய்து ஆறு முறையும் தோற்றுவிட்டான்.

மிகுந்த கவலையுடன் தன் இருக்கையில் அமர்ந்து தனது எதிரியை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் என மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தான். அவ்வேளையில் ஒரு சிலந்தி தனது கூட்டை அமைக்க முயன்றதைக் கவனித்துக் கொண்டிருந்தான். சிலந்தி ஆறுமுறை பாய்ந்து பாய்ந்து சிலந்திக் கூட்டை அமைக்க முயன்று கொண்டிருந்தது. ஆறுமுறையும் அது தோல்வியடைந்தது.

ஏழாவது முறை அது முயற்சித்தபோது அது கூட்டைக் கட்ட முடிந்தது. றொபேட் புரூஸ் உற்சாகம் அடைந்தான். ஏழாம் முறையும் போருக்குச் சென்றான், எதிரியைத் தோற்கடித்து வெற்றி பெற்றான்.

1. விடாமுயற்சி என்றால் என்ன?

___________________________________________________________________________

___________________________________________________________________________

2. விடாமுயற்சியை வலியுறுத்தும் வள்ளுவர் வாக்கு என்ன?

___________________________________________________________________________

3. தோமஸ் அல்வா எடிசன் என்ன கூறினார்?

___________________________________________________________________________

___________________________________________________________________________

4. ஊக்கமது கைவிடேல் என்று கூறியவர் யார்?

___________________________________________________________________________

5. றொபேட் புரூஸ் எந்த நாட்டு அரசன்?

___________________________________________________________________________

6. அவன் எத்தனை முறை போரில் தோல்வியடைந்தான்?

___________________________________________________________________________

7. றொபேட் புரூஸ் ஏழாவது முறை போரில் வெற்றிபெற காரணமாக அமைந்தது என்ன?

___________________________________________________________________________

___________________________________________________________________________

(7 x 2 = 14 புள்ளிகள்)

**1.2 எதிர்ச்சொல் தருக.**

1. வெற்றி :_____________________________________
2. கவலை :_____________________________________
3. எதிரி :_____________________________________
4. உறக்கம்:_____________________________________
5. இரவு :_____________________________________
6. குளிர் :_____________________________________

(6 x 1 = 6 புள்ளிகள்)

- BLANK PAGE -

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**விடை தருக.**

**சரியான வேற்றுமை உருபை சேர்த்து இடைவெளியை நிரப்புக..**

1. ஒரு ______________________ (காடு) குடிசை ஒன்று இருந்தது.
2. காட்டில் வேடன் ஒரு ______________________ (மனிதன்) சந்தித்தான்.
3. அந்த மனிதன் ______________________ (வேடன்) ஆங்கிலத்தில் பேசினான்.
4. அவன் பேச்சை ______________________ (வேடன்) புரிந்து கொள்ள முடியவில்லை.
5. இருவரும் ______________________ (நகரம்) நோக்கி நடந்து சென்றனர்.
6. சிறுமி வேகமாக ஓடினாள்.
   இவ்வாக்கியத்தின் எழுவாய் என்ன?

______________________________________________________________________________

7. வாணி வீணை மீட்டினாள்.
   இதில் செயப்படு பொருள் என்ன?

______________________________________________________________________________

8. தேனீக்கள் பூக்களைச் சுற்றிப் பறக்கின்றன.
   இவ்வாக்கியத்தின் பயனிலை என்ன?

______________________________________________________________________________

9. தோழர்கள் உணவகத்திற்கு சென்றனர்.
   இதில் எழுவாய் என்ன?

______________________________________________________________________________

10. ஆசிரியர் மாணவர்களுக்கு பாடம் கற்பித்தார்.
    என்பதில் செயப்படு பொருள் என்ன?

______________________________________________________________________________

(10 x 1 = 10 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**தொடக்கப்பட்ட பின்வரும் கதையை உமது கற்பனையில் எழுதி முடிக்கவும். நீர் எழுதும் ஆக்கம் 50 சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.**

அன்று தமிழ்ப் பாடசாலையின் பேச்சுப்போட்டி நடைபெறும் நாள். எனது பேச்சை முழுமையாகப் பாடமாக்கி பெற்றோருக்கு சொல்லிக்காட்டி அவர்களின் பாராட்டைப் பெற்றேன். மதியம் 1:30 மணிக்கு அம்மா, அப்பாவுடன் கலாசார உடை அணிந்து புறப்பட்டோம். மழை பெய்துகொண்டிருந்தது. வீதியில் வாகன நெரிசல் அதிகமாக இருந்தது. திடீரென எமது மோட்டார் வாகனம் இயங்கமறுத்து விட்டது, நேரம் போகிறது. அப்பாவும் முயற்சி செய்து கொண்டே இருக்கிறார்.....ம்ம்ம் முடியவில்லை.......

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

## பொருள் விளங்க வசனம் அமையுங்கள்.

1. மலை :______________________________

2. கரை :______________________________

3. அடி :______________________________

4. ஆணி :______________________________

5. படி :______________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

- BLANK PAGE -

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

அவுஸ்திரேலியாவில் உள்ள கங்காரு என்ற மிருகத்தைப் பற்றி உமது தாய் நாட்டில் இருக்கும் உறவினருக்கு 50 சொற்களுக்குக் குறையாது கடிதம் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் ஆங்கில வசனங்களை தமிழில் எழுதுக.**

1. The love of the mother.

2. She worked so hard.

3. The boy went to University.

4. He tripped on the way.

5. He started to cry loudly.

(5 x 2 = 10 புள்ளிகள்)

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்பில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.**

1. தமிழர்கள் கொண்டாடும் பண்டிகை ஒன்று.
2. அன்னையர் தினம்.
3. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களும் தமிழ்மொழித் தேவையும்.
4. கல்வி.